உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.08.2026 • மலர் 04 • இதழ்: 240 • வெள்ளி • Edition : Nagercoil • 28.08.2026 • Vol : 04 • Issue : 240 • Page : 4 • Rs. 5/-

# நேபாள வெள்ளம்: உயிரிழப்பு 270 ஆக அதிகரிப்பு - மீட்புப் பணிகள் தீவிரம்

## 299 இந்தியர்கள் மாயம், தமிழர்கள் 21 பேர் மீட்பு





காத்மாண்டு: நேபாள வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளதாக நேபாள காவல்துறை தெரிவித்துள்ளது. இதற்கிடையில், 299 இந்தியர்கள் மாயமானதாகவும், 21 தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரன்தீப் ஜெய்ஸ்வால் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், ஆகஸ்ட் 27 மதியம் 1 மணி நிலவரப்படி, 21 தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளதாக பட்டியலை வெளியிட்டுள்ளார்.

299 இந்தியர்கள் மாயம்: மேலும், வெளியுறவு அமைச்சக அறிக்கையில் 299 இந்தியர்கள் மாயமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திபெத்தில் உள்ள 200 இந்தியர்கள் உதவி கோரியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேபாளத்தின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து தேவையான நிவாரணப் பொருட்களை அனுப்பிவைப்பதாகவும், இந்தக் கடினமான சூழலில் நேபாள அரசுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

73 பேர் நீர்மின் திட்டத்தில் பணியாற்றியவர்கள்:

299 இந்தியர்கள் மாயமான நிலையில், இவர்களில் 73 பேர் மத்திய நேபாளத்தின் திரிசூலி நீர்மின் திட்டத்தின் பணியாற்றியவர்களாவர் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நீர்மின் திட்டப் பணிகளை மேற்கொண்டிருந்த நிறுவனத்துடன் நேபாளத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்பில் இருப்பதாகவும், அங்கிருந்தவர்களின் நிலைமை பற்றி மேலதிக தகவலைப் பெற முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளது. படங்களுடன் அமர்ந்திருக்கும் மக்கள்

நேபாளம் தேவ்கட் பகுதியில் காணாமல் போன உறவினர்களின் புகைப்படங்களுடன் அமர்ந்திருக்கும் மக்கள்

திரிசூலி நீர்மின் நிலையத் திட்டத்தில் இந்தியர்களுடன், நேபாளிகளும், தென் கொரியாவை சேர்ந்தவர்களும் பணியாற்றி வந்துள்ளனர்.

மொத்தம் 644 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை:

நேபாள சுற்றுலா துறை அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் நேபாள பெருவெள்ளத்துக்குப் பின்னர் 644 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை, இவர்களில் 517 பேர் வெளிநாட்டவர் என்று தெரிவித்துள்ளது. இதுதவிர 127 நேபாளிகளையும் காணவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

ஏற்கெனவே, “திடீர் வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 300 இந்தியர்கள் இவர்களில் பெரும்பாலானோர் மானசரோவர் யாத்ரீகர்கள் காணாமல் போயுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்களைத் தொடர்பு கொள்ள அரசாங்கம் முயன்று வருகிறது. வெளிநாட்டினரில் சுமார் 500 பேரை தொடர்பு கொள்ள முடியவில்லை” என்று நேபாள வெளியுறவு அமைச்சர் ஷிஷிர் கனால் கூறியிருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

37.5 டன் நிவாரணப் பொருட்கள்:

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்துக்கு இந்திய அரசு நேற்று 10 டன் நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் அனுப்பிவைத்த நிலையில் 37.5 டன் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “நேபாளத்துக்காக 37.5 டன் நிவாரணப் பொருட்கள், மருந்துகள், உணவுப் பொட்டலங்களை ஏற்றிக்கொண்டு இரண்டாவது விமானம் புறப்பட்டுள்ளது.

இந்தியா, நேபாள அதிகாரிகளுடன் நெருங்கிய, தொடர்ச்சியான தொடர்பில் உள்ளது.

நிவாரணப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து வலுவான ஆதரவை அளிக்கும்” என தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தீவிரமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு: செப்.30 கடைசி நாள்

தென்காசி, ஆக.28: தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில் இந்த ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்களைசெப்டம்பர் 30ம் தேதிக்குள் [www.tntourismawards.com](http://www.tntourismawards.com) என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என சுற்றுலாத்துறை இயக்குநரும்,

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநருமான முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், கடந்த 2022ம் ஆண்டு முதல் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், தொழில் முனைவோர், ஓட்டல் மற்றும் சுற்றுலா சார்ந்த நிறுவனங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு மொத்தம் 13 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன. சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், சிறந்த மாவட்ட சுற்றுலா ஊக்குவிப்பு, தூய்மையான சுற்றுலாத்தலம், சிறந்த மருத்துவ மற்றும் ஆரோக்கிய சுற்றுலா நிறுவனம், சிறந்த சாகச மற்றும் முகாம் சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி உள்ளிட்ட பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனத்திற்கும் விருது வழங்கப்படுகிறது. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் செப்டம்பர் 30க்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்குமாறு சுற்றுலாத்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் , பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.விஷூ மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

## நேபாள வெள்ளத்தில் உயிரிழந்தோருக்கு புதுச்சேரி சட்டப்பேரவையில் அஞ்சலி

புதுச்சேரி: நேபாள வெள்ளத்தில் உயிரிழந்தோருக்கு புதுச்சேரி சட்டப்பேரவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுச்சேரி சட்டப்பேரவை இன்று காலை கூடி, சபை நடவடிக்கைகள் தொடங்கியுவுடன் பேரவைத் தலைவர் அன்பழகன், நேபாளத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் ஏராளமான மக்கள் இறந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள், உடைமைகளை இழந்துள்ளனர். இந்திய நாட்டைச் சேர்ந்த 150 பேர் வெள்ளத்தால் பலியாகியுள்ளனர்.

இன்னும் பல ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி வருகிறது. இத்தகைய சூழலில் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உறுதுணையாக இருப்போம் என பிரதமர் மோடி ஆறுதல் தெரிவித்துள்ளார். மீட்பு நடவடிக்கையில் மத்திய உள்துறை அமைச்சகமும் ஈடுபட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை எடுத்த பிரதமருக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேபாள வெள்ளத்தில் இறந்தவர்களுக்க புதுச்சேரி சட்டப்பேரவை சார்பில் இரங்கலையும், அவர்களின் குடும்ப த்தினருக்கு வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்வோம் எனக் கூறி உறுப்பினர்களை அஞ்சலி செலுத்தும்படி கேட்டுக்கொண்டார். இதையடுத்து உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

## நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழர்களை மீட்க ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் அரசு குழு

### முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை: நேபாள வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள தமிழர்களை விரைந்து மீட்கும் வகையில், புதுடெல்லி தமிழக இல்ல உள்ளுறை ஆணையர் தலைமையிலான குழுவை நேபாளத்துக்கு அனுப்ப முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று, நேபாள நாட்டின் ரசுவா மாவட்டத்தில் உள்ள போடே கோசி ஆற்றில் ஏற்பட்ட திடீர் பெருவெள்ளத்தின் காரணமாக, அந்நாட்டுக்கு சுற்றுலா சென்று அங்கு சிக்கியுள்ள தமிழர்களை மீட்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேபாள நாட்டுக்கு தமிழகத்தைச் சேர்ந்த 103 நபர்கள் கைலாஷ் யாத்திரைக்காக இரண்டு குழுக்களாகச் சென்றுள்ளனர். அதில் முதல் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த 54 நபர்களும், புதுச்சேரியைச் சேர்ந்த 3 நபர்களும் என மொத்தம் 57 நபர்களும் இரண்டாவது குழுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 49 நபர்களும் இடம்பெற்றிருந்தனர். இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் தமிழர்கள் உட்பட பலர் காணாமல் போனதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அங்கு சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தில் உள்ள அவர்களது உறவினர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாகவும் அவசர தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டன.

மேலும், இப்பேரிடரில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை, நேபாள நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம், புதுடெல்லியிலுள்ள தமிழக இல்ல அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பயண முகவர் நிறுவனங்களின் (Travel Agencies) உதவியுடன் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், முதல்வர் விஜய், தமிழர்களை மீட்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் வகையில், புதுடெல்லி தமிழக இல்ல உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் தலைமையிலான குழுவினர் நேபாள நாட்டிற்கு நேரில் சென்று மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்திட உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மீட்கப்பட்டுள்ள 20 தமிழர்களை உடனடியாக தாயகம் அழைத்து வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்திடவும், மேலும் தொடர்பு கொள்ள இயலாதவர்களின் நிலையினைக் கண்டறிந்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்திடவும், தேவையான மருத்துவ உதவிகளை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் க. தென்னரசு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் ர. வினோத் மற்றும் அயலகத் தமிழர்நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை இயக்குநர் ரெ. சதீஸ் ஆகியோர் புதுடெல்லியிலுள்ள தமிழக இல்லத்தில் முகாமிட்டு, மீட்புப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவர்.

## “சுஸ்லான் நிறுவனம் ஆந்திராவுக்கு செல்லவில்லை” பேரவையில் அமைச்சர் கீர்த்தனா விளக்கம்



சென்னை: “தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்துள்ள சுஸ்லான் நிறுவனம், ஆந்திராவுக்குச் சென்றுவிட்டதாக பரவும் தகவல் தவறானது” என்று சட்டப்பேரவையில் அமைச்சர் கீர்த்தனா விளக்கம் அளித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா பேசியது: “கடந்த ஆகஸ்ட் 13ம் தேதி நடைபெற்ற வெற்றி தமிழகம் முதலீட்டாளர் மாநாட்டில் சுஸ்லான் (Suzlon) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால், அந்நிறுவனம் ஆந்திராவில் முதலீடு செய்ய சென்றுவிட்டதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது.

உண்மையில், சுஸ்லான் நிறுவனம் 2006ம் ஆண்டிலேயே கோவையில் காற்றாலை பாகங்கள் உற்பத்தியைத் தொடங்கியது. அதன்பின் 2011 முதல் 2020ம் ஆண்டு வரையான காலங்களில் சில உற்பத்திகளை அந்நிறுவனம் குறைத்துக்கொண்டது.

தமிழக அரசின் தொடர்ச்சியான முதலீட்டு ஈர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக சுஸ்லான் நிறுவனம் தற்போது நமது மாநிலத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் விரிவுபடுத்த முன்வந்துள்ளது.

முதல்வர் விஜய் முன்னிலையில் ரூ.500 கோடி முதலீடு மற்றும் 500 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி கோவையில் கண்ட்ரோல் பேனல்களும், தூத்துக்குடியில் விண்ட் பிளேடுகளும் உற்பத்தியாக உள்ளன.

அதேபோல், மதுரையைச் சேர்ந்த பத்மஸ்ரீ சின்னப்பிள்ளை குறித்து நான் கடந்த முறை பேசிய வார்த்தைகள் எதிர்க்கட்சிகளால் திரிக்கப்பட்டு அரசியலாக்கப்படுகிறது. பவுண்டேஷன் மூலம் கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் சின்னப்பிள்ளை. அவரது மகத்தான சேவையைப் பாராட்டியே முன்னாள்பிரதமர்வாஜ்பாய், அவரது கால்களில் விழுந்து ஆசி பெற்றார். சின்னப்பிள்ளையின் உந்துதலால், மதுரையில் உள்ள 'ஹை டெக் அராய்' (HiTech Arai) என்ற ஆட்டோமொபைல் நிறுவனத்துக்கு தேவையான 'ஓரிங்' ரப்பர்பாகங்களை மகளிர் சுய உதவிக்குழுவினர் செய்து தருகின்றனர். இதன் மூலம் சுமார் 200 பெண்கள் வரை வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இது தவிர தொழிற்சாலைகளையும், மகளிர் சுய உதவிக்குழுக்களையும் இணைத்து, ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் புதிய திட்டத்தை அரசு உருவாக்கி வருகிறது. இதைத்தான் ஊக்குவிக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகள் வார்த்தை ஜாலங்கள் மூலம் அரசியல் செய்கின்றன. எங்களுக்குப் பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றம் மட்டுமே முக்கியம்” என்று அமைச்சர் கீர்த்தனா தெரிவித்தார்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஜவுளி உற்பத்தி தொழில் முனைவோர் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# விளாத்திகுளம் பேரூராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தீவிரம்

விளாத்திகுளம் ஆகஸ்ட் 28.

தமிழகம் முழுவதும் மக்கள் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, வீடுகள் கணக்கெடுக்கும் பணி ஆகஸ்டு 1ந் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த பணிக்கான நிறைவு நாள் வருகிற 30ந் தேதி என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விளாத்திகுளம் பேரூராட்சி பகுதிகளிலும் வீடுகள் கணக்கெடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு பணியாளர்கள், பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் தேவையான விவரங்களை சேகரித்து வருகின்றனர்.

இதனிடையே, கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்காக தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். பொதுமக்களும் கணக்கெடுப்பு பணியாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்கி முழு ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர். விளாத்திகுளம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருவதால், பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கு வருகைதரும் கணக்கெடுப்பு பணியாளர்களுக்கு உரிய தகவல்களை வழங்கி ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பொது நல அமைப்புகளின் சார்பில் விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் நிறைவடைய இன்னும் 4நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், இதற்கான பணியாளர்கள் தங்களது வீடுகளுக்கு வரவில்லை என்றால் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் உடனடியாக 9385976727 மற்றும் 81240 90069 என்ற எண்ணில் தகவல் தெரிவித்து, மக்கள் தொகை கணக்கெடுப்பில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் ஆவணித் திருவிழா 11 ஆம் ஆம் திருநாளன்று மாலை சப்தாவர்ண சப்பரத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் மீனாட்சி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

# கேப்டன் விஜயகாந்தின் 74வது பிறந்தநாள்: பெத்ததாளபள்ளியில் 1,000க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்



கிருஷ்ணகிரி, ஆக.28: தேமுதிக நிறுவனர் புரட்சிக் கலைஞர் மறைந்த கேப்டன் விஜயகாந்தின் 74 வது பிறந்தநாள் விழா கட்சியினரால் வறுமை ஒழிப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி தமிழகம் முழுவதும்விஜயகாந்தின் சிலை மற்றும் திருவுருவ படங்களுக்கு தொடர்ந்து இரண்டு நாட்களாக, தேமுதிகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மேற்கு ஒன்றியம் பெத்ததாளபள்ளியில் தேமுதிக மேற்கு ஒன்றியச் செயலாளர் வஜ்ரவேல் மற்றும் ஒன்றிய அவை தலைவர் பவுன்ராஜ் தலைமையில் உற்சாகமாக கேக் வெட்டியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடினார்கள். கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.சின்னராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பெத்ததாளபள்ளியில் உள்ள ஆஞ்சநேயர்கோவிலில் சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அவருக்கு மேற்கு ஒன்றியத்தின் சார்பில்பட்டாசுகள்வெடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாக அங்குள்ள எம்ஜிஆர் திருவுருவ சிலைக்கு மாலைகள்அணிவித்துமரியாதை செய்யப்பட்டது. பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த கேப்டனின்திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.இதனைத்தொடர்ந்து கேக் வெட்டி பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி, சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானமாக பிரியாணி வழங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு முன்னாள் மாவட்ட செயலாளர்ஸ்ரீனிவாசன்,மாவட்ட பொருளாளர் லட்சுமணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் முருகேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், நிர்வாகி விஜயகாந்த், பார்க் சிவா, ஒன்றிய துணைச் செயலாளர் எல். ராமன், ஊராட்சி செயலாளர் பிரகாஷ், ஒன்றிய இளைஞரணி துணை செயலாளர் கணபதி, நிர்வாகிகளான வெங்கடேசன், மாயக்கண்ணன் கோவிந்தராஜ், டி.சி.சீனி, ஜி.கோவிந்தராஜ், மாவட்ட தொழிற்சங்க துணைச் செயலாளர் ராமசாமி, முருகன், அன்பு, ஊராட்சித் துணைச் செயலாளர் கோவிந்தன், சின்னத்தம்பி, மோகன், சிவா, கார்த்திக், செல்வம், ஜெயலட்சுமி, கிருஷ்ணவேணி, அரசு, வள்ளியம்மா, தமிழ்ச் செல்வி, உள்ளிட்ட ஏராளமான மாவட்ட, ஒன்றிய, நகர, பேரராட்சி, கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஏழைகளின் விடிவெள்ளி விஜயகாந்தின்பிறந்தநாள் நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியாக பெத்ததாளபள்ளி மேற்கு ஒன்றிய பொருளாளர் கார்த்தி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தருமபுரி மாவட்ட பாஜக விவசாய அணியின் சார்பில் விவசாய கடனை தள்ளுபடி செய்ய தமிழக அரசை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி ஆகஸ்ட் 28

தருமபுரி மாவட்ட பாரதிய ஜனதாகட்சி விவசாய அணி சார்பில் தமிழக அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் கார்த்திகேயன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்றது. தமிழகத்தில் விவசாயிகள் வங்கியில் பெற்ற பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பாரதியஜனதாகட்சி மாவட்ட தலைவர் சரவணன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழக அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். "விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசை கண்டிக்கிறோம்", "பயிர்க் கடனை உடனடியாக தள்ளுபடி செய்" போன்ற கோஷங்களை எழுப்பி தங்களது கோரிக்கைகளைவலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது செயலாளர் கணேசன், விவசாய அணி மாவட்ட செயலாளர் ராஜ்குமார், நகர தலைவர் சாய்.ஆறுமுகம், இளைஞர் அணி மாநில செயலாளர் பிரபாகரன், மாநில சமூக ஊடக பொறுப்பாளர் மோகன் ஹரிஷ் சிங் மற்றும் பாஜக மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளின் கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றாவிட்டால், தொடர்ந்து மாநிலம் தழுவிய போராட்டங்கள் நடத்தப்படும் என பாஜக விவசாய அணியினர் எச்சரிக்கை விடுத்தனர்.

# எரிவாயு நுகர்வோர்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம்

சேலம் ஆக 28

சேலம் மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் சேலம் மாவட்டத்தில் எரிவாயு உருளைகள் பயன்படுத்துவோர் எரிவாயு உருளைகள் பதிவு செய்வதிலும் விநியோகம் செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் புகார்கள் தொடர்பாக ஏரிவாயு பெறும் வாடிக்கையாளர்கள், அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் எரிவாயு முகவர்கள் ஆகியோர்களை கொண்டு சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் எரிவாயு நுகர்வோர்களுக்கான ஆகஸ்ட் மாத 2026 மாதாந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 28.08.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் அறை எண் 115 ல் மகிழம் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்கள் அனைவரும் இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளை மனுக்களாக அளித்து தீர்வு பெறுமாறு சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு கொங்கு கல்வி நிலையத்தில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம்




ஈரோடு ஆக 27

கேரள மக்களின் முக்கிய பண்டிகையாக ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகை ஈரோடு ரங்கம் பாளையத்தில் உள்ள கொங்கு நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி பள்ளி வளாகத்தில் அத்தப்பூ கோலம் போட்டு மாணவ மாணவிகளை வரவேற்றனர்.

இந்த பள்ளியில் படிக்கும் எல் கே ஜி முதல் 5 ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் கேரள உடை அணிந்து வந்திருந்தனர். ஓணம் பண்டிகையை வரவேற்கும் வகையில் குத்து விளக்கு ஏற்றி தீபம் ஏற்றி அதை சுற்றி மாணவ மாணவிகள் அமர்ந்து ஓணம் பாட்டுப் பாடி மகிழ்ந்தனர்.




# தவெகவில் மாற்று கட்சியை சேர்ந்த 20 பேர் இணைந்தனர்

நாகர்கோவில் ஆக 28,

நாகர்கோவில் கிழக்கு மாவட்ட தவெக அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் முன்னிலையில் மாற்றுக் கட்சியை சேர்ந்த சுமார் 20 பேர் த. வெ.க.,வில் இணைந்தனர்.

குமரி கிழக்கு மாவட்ட த. வெ.க.,சார்பில் நாகர்கோவிலில் நடந்த நிகழ்ச்சியில், முன்னாள் எம் எல்ஏ விஜயதரணி தலைமையில் மாற்று கட்சியை சேர்ந்தவர்கள் தவெக வில் இணையும் நிகழ்ச்சி நடந்தது.

குமரி மாவட்டம் நாகர்கோவில்பகுதியைசேர்ந்த டி.முருகன், சி.ஐயப்பன், ஜி.ஐ. சுவாமி, சுரேஷ், உட்பட சுமார் 20க்கும் மேற்பட்டோர் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் முன்னிலையில் த. வெ.க.வில் இணைந்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை தவெக நிர்வாகி கிருஷ்ணன் செய்திருந்தார்.

# கோவையில் மிக பிரமாண்டமான மீன்கள் கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அரங்கம் துவக்கம்



கோவை ஆக:28

கோவை அவினாசி சாலை சின்னியம்பாளையம் கோகுலம் பார்க் ஹோட்டல் எதிரே "கோவை அக்வா பார்க்"என்ற பெயரில் தமிழகத்திலேயே இரண்டாவது மிகப்பெரிய மீன்கள் கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அரங்கம் துவங்கப்பட்டுள்ளது.

இந்த மீன்கள் கண்காட்சி அரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட கடல் மீன்கள் மற்றும் டேம் மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.ஒரு கிராம் அளவில் மிக சிறிய மீன்கள் முதல் 40 கிலோ மிகப்பெரிய மீன்கள் வகை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.மேலும் பொழுதுபோக்கு அம்சங்களாக கைகளில் அமரும் பறவைகள் மற்றும் நெருப்புக்கோழிகள் இந்த அரங்கில் இடம் பெற்றுள்ளன. நமது கோவை மாநகரில் இதுவரைசிலகுறிப்பிட்ட இடங்கள் மட்டுமே பொழுதுபோக்கு அம்சங்களாக இருந்து வருகிறது.

இந்த "கோயம்புத்தூர் அக்வா பார்க்"மீன் கண்காட்சி அரங்கம் நமது கோவையின் அடையாளங்களுள் ஒன்றாக திகழப்போகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டு ரசிக்கும் இடமாகஇந்த "கோயம்புத்தூர் அக்வா பார்க்"மீன்கள் கண்காட்சி அரங்கம் அமைந்துள்ளது.

இந்த கண்காட்சி அரங்கை காண பொதுமக்கள் காலை 10 மணி முதல் மாலை 6:00 மணி வரை வரலாம் என்றும்,குழந்தைகளுக்கு ரூபாய் 200 மற்றும் பெரியவர்களுக்கு ரூபாய் 300 எனகட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் "கோவை அக்வா பார்க்"நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கண்காட்சி அரங்கை கோவை சூலூர் சட்டமன்ற உறுப்பினர் சுகுமார் துவக்கி வைத்தார்.மேலும் இந்த கண்காட்சி அரங்கிலேயே உணவுக்கூடம்,தாய்மார்கள் பாலூட்டும் அறை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இடம் பெற்றுள்ளது. இந்த கண்காட்சி வளாகம் முழுவதும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இனிமேல் "கோவை அக்வா பார்க்"மீன்கள் கண்காட்சி வளாகம் நமது கோவை மக்களின் விடுமுறை தினங்களை இனிமையாக மாற்றும் என்பதில் சந்தேகம் இல்லை. வந்து பாருங்கள்,கண்டு மகிழுங்கள். என்று தெரிவித்தனர்.

# குற்றாலத்தில் தமிழ்நாடு பாஜக அனைத்து பிரிவுகளின் மாநில நிர்வாகிகள் கருத்தரங்கம்




தென்காசி, ஆகஸ்ட்.28

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தமிழ்நாடு பாஜக அனைத்து பிரிவுகளின் மாநில நிர்வாகிகள் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழ்நாடு பாஜக அனைத்து பிரிவுகளின் மாநில அமைப்பாளர் ராகவன், தென்காசி மாவட்ட பாஜக தலைவர் ஆனந்தன் அய்யாசாமி மற்றும் பாஜக அனைத்து பிரிவுகளின் மாநில நிர்வாகிகள், அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மாநில நிர்வாகிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சி குறித்து விரிவாக கலந்துரையாடினார்கள் பின்னர் மத்திய அரசின் சாதனை புத்தகத்தை வெளியிட்டு அந்த புத்தகத்தை கலந்து கொண்ட மாநில நிர்வாகிகள், அமைப்பாளர்கள் அனைவருக்கும் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வழங்கினார்.

# ஏடிஎம் பாதுகாவலர்களுக்கு காவல் ஆய்வாளர் அறிவுரை



ராணிப்பேட்டை ஆக 28

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் தனியார் மற்றும் அரசு ஏடிஎம் மையங்களின் பாதுகாவலர்களுக்கான கலந்தாய்வுக்கூட்டம் வாலாஜா டி2 காவல் நிலையம் காவல் ஆய்வாளர் சக்தி கணேஷ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், ஏடிஎம்மையங்களில்திருட்டு மற்றும் பிற குற்றச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது தொடர்பாக பாதுகாவலர்களுக்கு காவல் ஆய்வாளர் சக்தி கணேஷ் பல்வேறு அறிவுரைகளை வழங்கினர். ஏடிஎம் மையங்களில் சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டம், சந்தேகமான செயல்பாடுகள் குறித்து உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது மேலும், ஏடிஎம் மையங்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்தி, குற்றச்சம்பவங்களைத் தடுக்கும் வகையில் விழிப்புடன் பணியாற்றுமாறும் பாதுகாவலர்களுக்கு போலீசார் அறிவுரை வழங்கினர்.

# த.வெ.க. அரசின் 100 நாள் சாதனை கொண்டாட்டம்: தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள், சமபந்தி விருந்து



முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் 100 நாட்கள் சாதனைகளை கொண்டாடும் வகையிலும், ஓணம் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை கவுரவிக்கும் வகையிலும் அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்வழங்கும்விழா அறுகுவிளையில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. த.வெ.க. முக்கிய நிர்வாகியும், தொழிலதிபருமான பால்ராஜ் ஏற்பாட்டில்நடந்தஇந்தவிழாவில் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன், மாவட்ட இணைச் செயலாளர் பிரேம் குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். பின்னர் தொழிலதிபர் பால்ராஜ்மற்றும்மாவட்ட செயலாளர் மாதவன் ஆகியோா் இணைந்து தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அந்த வகையில் 800க்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளாக வேட்டி, சேலை வழங்கப்பட்டது. தூய்மை பணியாளர்களின் கடின உழைப்பை பாராட்டியும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் இந்த நலத்திட்ட உதவிகள் அமைந்தன

இதைத் தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு சமபந்தி விருந்தை மாவட்ட செயலாளர் மாதவன் மற்றும் பால்ராஜ் தொடங்கி வைத்து அவர்களுடன் சமபந்தி உண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட செயற்குழு உறுப்பினர் சக்தி குமரன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ரஞ்சித், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் அசோக் செல்லம், கவுன்சிலர்கள் அக்சய கண்ணன், ஸ்ரீலிஜா, மாநகர நிர்வாகி முத்துப்பாண்டி, 11வது வார்டு செயலாளர் ஆனந்த் செல்லம், மற்றும் வட்ட செயலாளர்கள் அஜித், விஜயகுமார், சசிகரன், ஜெரின்,மணிகண்டன், விஷ்ணு, ராஜேஷ், முஜித், விஸ்வநாத், உள்பட பலர்கலந்துகொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !




ஈரோடு மாவட்டம் டர்மரிக் ஹோட்டல் கூட்டரங்கில் மஞ்சள் சாகுபடிக்கான பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ் முறை குறித்த கருத்தரங்கை மாவட்ட ஆட்சித் ச.கந்தசாமி, நேற்று துவக்கி வைத்தார்.




# 'லோட்டஸ் ஆப்டிக்' புதிய கிளை கோயம்புத்தூரில் அறிமுகம்

கோவை ஆக:28 லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், பொதுமக்களுக்கு தரமான கண் சிகிச்சை மற்றும் கண் கண்ணாடி அணிகலன்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் 'லோட்டஸ் ஆப்டிக்'என்ற புதிய பிரிவு கோயம்புத்தூர் அவிநாசி சாலையில் உள்ள சித்ரா பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய கிளை திறப்பு விழாவில் தமிழ்நாடு மாநில இந்திய மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏ.கே. ரவிக்குமார்,இந்திய மருத்துவ சங்கத்தின் செயலாளர் எஸ்.கார்த்திக் பிரபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சங்கீதா சுந்தரமூர்த்தி, இயக்குநர் கே.எஸ். ராமலிங்கம் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். லோட்டஸ் ஆப்டிக் மூலம் கண் பரிசோதனை,பார்வைக் குறைபாடுகளுக்கான தீர்வுகள் மற்றும் நவீன கண் கண்ணாடி அணிகலன்கள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 30 2026 வரை நிறுவன முத்திரை கொண்ட கண்ணாடி சட்டகங்களுக்கு 50 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.லோட்டஸ் கண் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் கண்புரை அறுவை சிகிச்சை, பார்வைத் திருத்த அறுவை சிகிச்சை, விழித்திரை, கண் அழுத்த நோய் மற்றும் கருவிழி உள்ளிட்ட பல்வேறு கண் மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

# புதுக்கடை தேசிய வங்கியில் வைப்பு நிதியிலிருந்து பணம் மோசடி

புதுக்கடை, ஆக.28 புதுக்கடை அருகே உள்ள மேலங்கலம் பகுதி பிலாவிளை என்ற இடத்தை சேர்ந்தவர் ராஜகுமார் மனைவி லதா (52). இவருக்கு புதுக்கடையில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் வங்கி கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கில் 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை வைப்பு நிதியாக வைப்பீடு செய்திருந்தார்.

பின்னர் இந்த தொகையை கடந்த 22. 6. 2026 அன்று திரும்ப பெறுவதற்காக வங்கிக்கு சென்றுள்ளார். அப்போது வங்கியில் கிளை மேலாளராக இருந்தவர், லதாவின் வங்கி கணக்கிலிருந்து யாரோ ஏடிஎம் மூலம் ரூபாய் 1 லட்சத்து 84 ஆயிரத்தை எடுத்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் லதா தனது கணக்கில் வங்கியில் இருந்து ஏடிஎம் கார்டு வாங்கவில்லை என கூறியுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து புதுக்கடை போலீசில் லதா புகார் அளித்தார். போலீசார் நடத்திய விசாரணையில் வங்கியின் அப்போதைய கிளை மேலாளர் மற்றும் மண்டல மேலாளர் சேர்ந்து 3ம் நபர் ஒருவர் மூலம் இந்த பணத்தை ஏமாற்றி எடுத்திருப்பது தெரிய வந்தது. இதையடுத்து புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் புதுக்கடை பாரதிய ஸ்டேட் வங்கியின் அப்போதைய மேலாளர், மண்டல மேலாளர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து இன்ஸ்பெக்டர் மீனா இது தொடர்பாக விசாரித்து வருகிறார்.




# கோவை காமாட்சிபுரி ஆதீனத்தில் உதிரம் செயலி வெளியீட்டு விழா

கோவை ஆக:28 கோவை இருகூர் காமாட்சிபுரி ஆதீனம் இரண்டாம் குரு மகா சன்னிதானம் சாக்த ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர சுவாமிகள் தொடங்கி சிறப்புரையாற்றி உதிரம் செயலி வெளியீட்டு விழா தொடங்கி வைத்தார்.உதிரம் நிர்வாக இயக்குனர் சிவகுமார் மற்றும் அங்குராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூறுகையில் மருத்துவமனையில் சிரமத்தில் இருக்கும் போது அவர்களின் ரத்த தேவையை பூர்த்தி செய்யும் தானியங்கி ஏஐ செயலியை பொது மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த செயலி அறிமுகம் படுத்தப்பட்டுள்ளது. இதில் சிறப்பு அழைப்பாளராக சிம்ட்டா குரூப் நிர்வாக தலைவர் சம்பத்குமார், வள்ளியம்மாள் அறக்கட்டளை நிறுவனர் ஜிஎம்வள்ளியம்மாள்,கருமத்தம்பட்டி ரோட்டரி கிளப் துளிர் ஆர் மோகன் ராஜ்,கேர் அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் பிரியதர்ஷினி விமல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!

# வடலிவிளையில் அங்கன்வாடி மையம் விஜய்வசந்த் எம் பி திறந்து வைத்தார்



நாகர்கோவில், ஆக.28 குமரி பாராளுமன்ற உறுப்பினர்விஜய்வசந்த், எம்பி, தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நாகர்கோவில் 40 வது வார்டு வடலிவிளை பகுதியில் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அங்கன்வாடி மையம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் கலந்துகொண்டு அங்கன்வாடி மையத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஐஸ்வர்யா, நாகர்கோவில் மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் சிவபிரபு, மாநகராட்சி மேயர் மேரி பிரின்சி லதா, மாமன்ற உறுப்பினர்கள் நவீன்குமார், அகஸ்டினா கோகிலவானி, உட்பட காங்கிரஸ், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குமரி :குளத்தில் சடலமாக கிடந்த இளைஞர் போலீசார் விசாரணையில் அடையாளம் தெரிந்தது



நாகர்கோவில், ஆக.28 நாகர்கோவில் தோட்டியோடு 4 வழிச்சாலையை ஒட்டி உள்ள குதிரைபாஞ்சான் குளத்தில் நேற்று முன்தினம் ஆண் சடலம் ஒன்று அரை நிர்வாண நிலையில் கிடந்தது. அந்த ஆண் ஜட்டி மட்டும் அணிந்திருந்தார். உடல் கவிழ்ந்த நிலையில் கிடந்தது. இதை அந்த வழியாக வந்தவர்கள் பார்த்து இரணியல் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடம் வந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து நடந்த விசாரணையில் குளத்தில் இறந்து கிடந்தவர் களியக்காவிளை மீனச்சல் மேல தெற்றிவிளை பகுதியை சேர்ந்த கிறிஸ்துராஜ் மகன் திலீப் டேனியல் (20) என தெரிய வந்தது. இவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது. கடந்த 23ம் தேதி வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பவில்லை. இது சம்பந்தமாக களியக்காவிளை காவல் நிலையத்தில் கிறுஸ்தராஜ் கடந்த 24ம் தேதி புகார் அளித்துள்ளார்.

இந்த நிலையில்தான் நேற்று காலையில் தோட்டியோடு குதிரைபாய்ந்தான் குளத்தில் திலீப் டேனியல் பிணமாக மிதந்துள்ளார். அவரது அண்ணன் டேனியல் ராஜ் (21) கொடுத்த புகாரின் பேரில் இரணியல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரிய வகை பொருட்களை வழங்குபவர்களுக்கு வெகுமதி ;குமரி கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில், ஆக.28 கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் மு. பிரதாப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நமது மாவட்டத்தின் அரசு அருங்காட்சியகம், வரலாற்றுச் சான்றுகளையும் நமது முன்னோர்களின் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாக்கும் முக்கிய அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகத்தை மேலும் மேம்படுத்தவும், வரும் தலைமுறையினர் நமது வரலாற்றை அறிந்து கொள்ளவும், நமது மாவட்டத்தில் உள்ள பல தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் வசம் உள்ள அரிய வகை பழங்கால நாணயங்கள், சிலைகள். ஓலைச்சுவடிகள், ஆயுதங்கள், இசைக்கருவிகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் போன்ற அரும்பொருட்களை வழங்க விரும்பும் நபர்களுக்கு, தகுந்த வெகுமதி (மதிப்பூதியம்) வழங்க அரசு அருங்காட்சியகம் முன்வந்துள்ளது. எனவே, அரும்பொருட்களை வைத்துள்ள பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள், தாமாக முன்வந்து அவற்றை அருங்காட்சியகத்திற்கு அன்பளிப்பாகவோ அல்லது உரிய வெகுமதி பெற்றுக் கொண்டோ பழமையான அரும்பொருட்களை காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், கன்னியாகுமரி ஆகியோர்களிடம் வழங்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

# குமரியில் மிலாடி நபி விடுமுறையில் மதுவிற்ற 9 பேர் கைது

நாகர்கோவில், ஆக. 28 நாடெங்கிலும் மிலாடி நபி விடுமுறை தினம் நேற்று முன்தனம் கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி தமிழகத்தில் அரசு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. டாஸ்மாக் கடைகள் திறக்காததால் வெளி மார்க்கெட்டில் மது வகைகள் விற்பனை நடைபெறுவதை தடுக்க குமரி மாவட்ட போலீஸ் எஸ் பி, ஸ்டாலின் உத்தரவிட்டார். உத்தரவின் படி மாவட்ட முழுவதும் நேற்று முன்தனம் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

நாகர்கோவில் நேசமணி நகர் போலீஸ் சிறப்பு எஸ்ஐ செல்வகுமார் மற்றும் போலீசார் ஆயுதப் படை மைதானம் செல்லும் சாலையில் ரோந்து சென்றனர். அப்போது தெற்கு சூரங்குடியை சேர்ந்த மகாபு சுப்புகனி என்பவர் மது விற்றுக் கொண்டிருந்தார். அவரை போலீசார் கைது செய்து, அவர் விற்பனைக்கு வைத்திருந்த 16 மது பாட்டில்களையும் ரொக்க பணம் ரூ 6,550யும் பறிமுதல் செய்தனர்.

இதுபோல் தக்கலை போலீசார் மது விற்றதாக மூன்று பேரையும், கொற்றிக்கோடு போலீசார் ஒருவரையும், ஈத்தாமொழி போலீசார் ஒருவர் என மாவட்ட முழுவதும் மது விற்றதாக 9 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து சுமார் 110 மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

# மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை 28 வார கர்ப்பிணிக்கு முதுகுத்தண்டு சிகிச்சை செய்து சாதனை




மதுரை ஆக 28, மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் 28 வார கர்ப்பிணிக்கு சிக்கலான முதுகுத்தண்டு வட அறுவை சிகிச்சை செய்து சாதனை. மேலும் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுத்தார் என்பது கூடுதல் சிறப்பு. கிட்டத்தட்ட ஓராண்டாக கடுமையான கழுத்து வலியால் அவதிப்பட்டு வந்த 28 வயது கர்ப்பிணிப் பெண்ணுக்கு முதுகுத்தண்டுவட காச நோய் உருவானதால் நடப்பதில் சிரமமும், மார்புக்குக் கீழே உணர்ச்சியிழப்பும் ஏற்பட்டுருத்தது. முதுகுத்தண்டுவட அழுத்தத்தை குறைப்பதற்கான சிகிச்சையையும், திசு நீக்கம் மற்றும் நோயாளியின் சொந்த எலும்புகளைக் கொண்டு முதுகுத்தண்டை நிலைநிறுத்தும் ஒட்டு மொத்த அறுவை சிகிச்சையையும் மருத்துவர்கள் குழு வெற்றிகரமாக மேற்கொண்டது. அதே நேரத்தில் கர்ப்பத்திலுள்ள கருவுக்கு கதிர்வீச்சு பாதிப்பு ஏற்படாதவாறு உரிய சிகிச்சை அளித்து தாய், சேய் இருவரும் நலமாக உள்ளனர் என பத்திரிக்கையாளர் சந்திப்பில் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி நரம்பியல் அறுவை சிகிச்சை துறைத் தலைவர் மருத்துவர் செல்வமுத்துக் குமரன் கூறினார். உடன் முதுநிலை நிபுணர் மருத்துவர் செந்தில்குமார், இணை நிபுணர் மருத்துவர் கவீஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# பொம்மிடியில் பெண்களுக்கு தேங்காய் மற்றும் சிறுதானிய மதிப்புக்கூட்டல் பயிற்சி




தருமபுரி ஆகஸ்ட் 28 தருமபுரி மாவட்டம் பொம்மிடியில் பெண்களுக்கான 20 நாள் இலவச தொழில்முனைவோர் பயிற்சி நடைபெற்றது. இந்திய தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (எடிய் ), அகமதாபாத் சார்பில் ப்ராஜெக்ட் சங்கல்ப் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. ஸ்டாண்டர்ட் சன்டெரெட் குளோபல் பிசினஸ் செர்விக்ஸ் (ஸ்கூப்ஸ் ) நிறுவனம் இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியது. இந்தப் பயிற்சியில் தேங்காய் மற்றும் சிறுதானியங்களை பயன்படுத்தி பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிப்பது குறித்து பெண்களுக்கு செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. தேங்காய் இனிப்பு, தேங்காய் பால், தேங்காய் பன், சிறுதானிய லட்டு, ஹெல்த் மிக்ஸ், Nutri ABC Malt உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த பயிற்சியின் நிறைவு விழா ஆகஸ்ட் 26 ம் தேதி நடைபெற்றது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பெண்களுக்கு EDII MSDP சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பேசிய எடிய் தொழில்முனைவோர் நிபுணர் அசோக், பயிற்சி முடித்த பெண்கள் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கு எடிய் தொடர்ந்து வழிகாட்டும் என்று தெரிவித்தார். மேலும், பமஂ%மே , ட்வீஸ் உள்ளிட்ட அரசு திட்டங்கள் மூலம் கடன் மற்றும் மானிய உதவி பெறுவதற்கான வழிகாட்டுதலும் வழங்கப்படும் என்றார். தொழில் தொடங்குவதற்கான வங்கி கடன் இணைப்பு, பைசை பதிவு, மாசம் உதயம் பதிவு, பிராண்ட் மற்றும் மார்க்கெட்டிங் உதவி, கண்காட்சி மற்றும் சந்தை வாய்ப்புகள் போன்ற பல்வேறு உதவிகளையும் EDII வழங்கி வருகிறது. இதற்காக பயனாளிகளிடம் எந்த வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். மேலும், உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் மதிப்புக்கூட்டல் தொழில் குறித்து நேரடியாக தெரிந்து கொள்ளும் வகையில் தஞ்சாவூர் NIFTEM நிறுவனத்திற்கு ஒரு நாள் பயணமும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் பமஂ%மே தருமபுரி மாவட்ட வளநபர் கௌரி கலந்து கொண்டு பெண்களை ஊக்கப்படுத்தினார். பமஂ%மே திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் மானிய உதவி பெறுவதற்கான செயல்முறைகளில் உதவுவதாக உறுதியளித்தார். பமஂ%மே திட்டத்தின் மூலம் மானிய உதவி பெற்று தருமபுரி மாவட்டத்தில் வெற்றிகரமாக தொழில் நடத்தி வரும் செந்தில்குமார் மற்றும் கௌசல்யா ஆகியோர் தங்களது தொழில் அனுபவங்களை பயனாளிகளுடன் பகிர்ந்து கொண்டனர். சிறுதானிய பொருட்களுக்கு தற்போது உள்ள சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்தும் விளக்கினர். மேலும் எடிய் பயனாளிகள் தயாரிக்கும் சிறுதானிய பொருட்களை வாங்குவதற்கு உதவுவதாகவும் தெரிவித்தனர். சங்கல்ப் பச்சே 1 திட்டத்தின் கீழ் எடிய் பயிற்சி பெற்ற சரண்யா தனது தொழில் பயணத்தை பகிர்ந்து கொண்டு பயிற்சியில் கற்றுக் கொண்ட திறன்களை பயன்படுத்தி சொந்த தொழிலை தொடங்கி முன்னேறுமாறு பயனாளிகளை ஊக்கப்படுத்தினார். பெண்களுக்கு திறன் பயிற்சி வழங்குவதுடன் அவர்கள் தொழில் தொடங்கி வருமான ஈட்டுவதற்கான அரசு திட்டம், வங்கி கடன் ,சந்தை வாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதலை தொடர்ந்து வழங்குவதே ப்ராஜெக்ட் சங்கல்ப் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். "பெண்கள் பயிற்சியில் கற்றுக் கொண்ட திறன்களை பயன்படுத்தி சொந்த தொழில் தொடங்கி தங்களது குடும்ப வருமானத்தை உயர்த்துவதற்கு தேவையான அனைத்து வழிகாட்டுதலையும் எடிய் தொடர்ந்து வழங்கும்" என்று எடிய் தொழில் முனைவோர் நிபுணர் அசோக் தெரிவித்தார்.



சேலம் ஸ்ரீ ராஜகணபதி கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதற்கான முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் ஆய்வு செய்த போது எடுத்த படம்.

# நாகர்கோவில் கிம்ஸ்ஹெல்த் மருத்துவமனையில் ஓணம் கொண்டாட்டம்



நாகர்கோவில், ஆக., 28 நாகர்கோவில் கிம்ஸ்ஹெல்த் மருத்துவமனையில் ஓணம் திருவிழா கொண்டாட்டம் மற்றும் கலாச்சார சங்கமம் மிகக் கோலாகலமாகவும் உற்சாகமாகவும் நடைபெற்றது. மருத்துவமனையின் உள்நோயாளி மற்றும் வெளிநோயாளி பராமரிப்பு சேவைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாத வகையில், மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், நிர்வாகத் துறை, வசதிகள் பராமரிப்புத் துறை, உணவு மற்றும் பானங்கள் துறை மற்றும் அனைத்து உதவிப் பணியாளர்களும் இந்த நாள் முழுவதுமான நிகழ்வில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.விழாவின் முக்கிய சிறப்பம்சங்கள்: அத்தப்பூகோலப்போட்டி 'உற்சாகம்', ' வீரம்', 'ரௌத்ரம்', 'மேளம்', 'விஸ்மயம்' ,'வியப்பு' போன்ற பல்வேறு குழுக்களாகப் பிரிந்த ஊழியர்கள், அத்தப்பூ பூக்கோலங்களை இட்டு பாரம்பரிய ஆடைகளை அணிந்து கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஊழியர்கள் அனைவருக்கும் 'ஓணசத்யா' விருந்து வழங்கப்பட்டது. பிற்பகல் முதல் அனைத்துத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும் ஆர்வத்துடன் பங்கேற்ற இசை, நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாலை நடைபெற்ற கலாச்சார விழவில் பரிசுகள் வழங்கப்பட்டது.

# மார்த்தாண்டம் அருகே மெக்கானிக்குக்கு சரமாரி குத்து;2 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம்.ஆக.28 மார்த்தாண்டம் அருகே உள்ள நட்டாலம் பகுதியை சேர்ந்த செல்லத்துரை என்பவருக்கு ஜெகதீஷ், கார்த்திக் (28) என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் கார்த்திக் பைக் மெக்கானிக் வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் ஜெகதீஷுக்கும் நட்டாலம் பரியாக்கரை பகுதியை சேர்ந்த ஜெனிஷ், பிரசாந்த் ஆகியவர்களிடையே மது குடிப்பது தொடர்பாக தகராறு ஏற்பட்டுள்ளது.இந்த நிலையில் கார்த்திக் சம்பவ தினம் அந்த பகுதியில் உள்ள நகை கடைக்கு சென்று விட்டு வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஜெனிஸ், பிரசாந்த் ஆகியோர் கார்த்திக்கின் அண்ணன் மீது உள்ள கோபத்தில் கார்த்திக்கை வழி மறித்து, தகாத வார்த்தைகளால் திட்டி அவரை தாக்கி உள்ளனர். இதை அடுத்து ஜெனிஸ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கார்த்திக்கின் இடது கழுத்தில் குத்தினார். பிரசாந்த் கல்லை எடுத்து தாக்கியுள்ளார். பின்னர் இரண்டு பேரும் சேர்ந்து உனது அண்ணனை கொல்லாமல் விடமாட்டோம் என கூறிவிட்டு தப்பி சென்றனர்.

இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த கார்த்திகை அக்கம்பக்கத்தினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரி பேரில் மார்த்தாண்டம் போலீசார் கார்த்திகை தாக்கிய இரண்டு வாலிபர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எடப்பாடியாரை வரவேற்க தொண்டர்களுக்கு அழைப்பு: காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய செயலாளர் வேண்டுகோள்



காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கழக நிறுவனர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களின் அருளாசியோடு, நம் கண்களை இமை காப்பதுபோல் கழகத்தைவழிநடத்திவரும் கழகப் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான புரட்சித் தமிழர் மாண்பு மிகு திரு. எடப்பாடியார் ஓசூர்மாநகரகழகச்செயலாளர் J.P @ ஜெயபிரகாஷ் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்த வருகை தர உள்ளார் அதுசமயம் 29.08.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையான சப்பாணிப்பட்டி பைபாஸ் அருகே கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அண்ணன் கேபி முனுசாமி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்க உள்ளதால் காவேரிப் பட்டினம் தெற்கு ஒன்றியக் கழகத்திற்கு உட்பட்ட முன்னாள், இந்நாள் மாவட்ட, ஒன்றிய, சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து, கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்குமாறு காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பாக பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# குமரன் மருத்துவமனை 20 மணிநேர மாரத்தான் அறுவை சிகிச்சை செய்து அரிய வகை கட்டியை அகற்றி சாதனை



சென்னை, ஆக.28, 29 வயதான ஒரு ஐடி ஊழியருக்கு குடலைத் தாங்கிப் பிடிக்கும் சவ்வுப் பகுதியில் இருந்த 20x20 x18 செ.மீ அளவுள்ள, மிகவும் அரிய மற்றும் அபாயகரமான கட்டியை கீழ்ப்பாக்கத்தில் உள்ள குமரன் மருத்துவமனையின் மருத்துவர்கள் குழு 20 மணி நேரம் தொடர்ந்து மேற்கொண்ட அறுவை சிகிச்சையில் வெற்றிகரமாக அகற்றி சாதனை படைத்துள்ளது. இந்த நோயாளிக்கு மரபணு ரீதியாகவே சில கட்டிகள் உருவாகும் அபாயம் அதிகம் கொண்ட 'நியூரோஃபைப்ரோமாடோசிஸ் வகை 1' என்ற மரபியல் ரீதியான பரம்பரை நோய்க்கான வாய்ப்பு இருந்தது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ரேலா மருத்துவ குழுவினர் மற்றும் குடல், இரைப்பை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பி. கபில் நாகராஜ் ஆகியோர் இந்த மருத்துவ சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இவர்களுக்குத் துணையாக மயக்கவியல் நிபுணர், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், தீவிர சிகிச்சைப் பிரிவு நிபுணர், தொற்றுநோய் தடுப்பு நிபுணர், கதிரியக்கவியல் நிபுணர் மற்றும் தீவிர சிகிச்சைப்பிரிவுசெவிலியர்கள் அடங்கிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவக் குழு, இந்த மாரத்தான் அறுவை சிகிச்சைக்கு பங்களிப்பையும் வழங்கினர்.

# குமரி விவேகானந்தா கேந்திரா தலைவர் மரணம்; பிரதமர், ஆளுநர் இரங்கல்



நாகர்கோவில், ஆக.28 கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா தலைவர் ஏ.பாலகிருஷ்ணன்நேற்று முன்தினம் இரவு மரணமடைந்தார். அவரது மரணத்திற்கு பிரதமர்மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஆளுநர் விஸ்வநாத் அர்லேக்கர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரா தலைவர் ஏ,பாலகிருஷ்ணன்(88) கடந்த சில மாதங்களாக உடல்நலக் குறையால் நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் மரணமடைந்தார். 1981 முதல் 2001வரை அகில இந்திய விவேகானந்தா கேந்திரா பொதுச் செயலாளராகவும், 2001 முதல் 2020 வரை துணைத் தலைவராகவும், 2020 முதல் தலைவராகவும் பாலகிருஷ்ணன் பணியாற்றி வந்தார். அருணாச்சலப் பிரதேசத்திலும் விவேகானந்தா கேந்திராவில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

விவேகானந்தா கேந்திரா நிறுவனர் ஏக்நாத்ஜி ரானடேவிடம் பயிற்சி பெற்ற இவர், விவேகானந்தரின் லட்சியங்களுக்காக வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்துள்ளார். கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த பாலகிருஷ்ணனின் இறுதிசடங்கு நாளை(29ந் தேதி) மதியம் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா வளாகத்தில் நடைபெறுகிறது.

பாலகிருஷ்ணனின் மறைவிற்கு பிதரமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழக ஆளுநர் விஸ்வநாத் அர்லேக்கர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# சட்டப்பேரவை நிகழ்வுகள் வேதனை அளிக்கிறது: மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வாசுகி வேண்டுகோள்



தஞ்சாவூர் கீழவாசல் காமராஜர் சிலை அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மக்கள் சந்திப்பு இயக்கம் மற்றும் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் வாசுகி, மாவட்ட செயலாளர் சின்னை. பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்று பொதுமக்களுக்கு கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

கூட்டத்தில் பேசிய வாசுகி, தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகள் வேதனை அளிக்கும் வகையில் இருப்பதாக விமர்சித்தார். மக்கள் வரிப்பணத்தில் நடைபெறும் சட்டப்பேரவையில் ஆளுங்கட்சியும், எதிர்க் கட்சியும் மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதித்து தீர்வு காண வேண்டும் என்றார்.

டெல்டா விவசாயிகளுக்கு தண்ணீர், மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை, சிறுபான்மையினர் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து சட்டப்பேரவையில் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், குடும்பத் தலைவிகளுக்கு ஆண்டுக்கு 6 இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிபந்தனையின்றி நிறைவேற்ற வேண்டும். தற்போது வழங்கப்படும் 3 சிலிண்டர்களை 6 ஆக உயர்த்துவதுடன், மகளிர் உரிமைத்தொகையை ரூ.2,500 ஆக உயர்த்தி விடுபட்டவர்களுக்கும் வழங்க வேண்டும் என வாசுகி வலியுறுத்தினார்.



# கிருஷ்ணகிரி வெங்கடாபுரம் அதியமான் நகரில் போதிமரம் முதியோர் பராமரிப்பு இல்லத்தில் கேப்டன் விஜயகாந்தின் 74 வது பிறந்தநாள் விழா

கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 28: கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்திய ஒன்றியம் மேல் சோமார்பேட்டை கிளை கழகம் சார்பில், கிருஷ்ணகிரி வெங்கடாபுரம் அதியமான் நகரில் போதிமரம் மூத்தோர் பராமரிப்பு இல்லத்தில் கேப்டன் விஜயகாந்தின் 74 வது பிறந்த நாள் விழா கேக் வெட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பி.மாதேஷ் தலைமையில் கொண்டாடப்பட்டது. கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.சின்னராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதியோர் இல்லத்தில் சமையலுக்கு தேவையான பொருட்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு மத்திய ஒன்றிய அவைத் தலைவர் பகுத்தன் என்கின்ற சுரேஷ் வரவேற்பு உரையாற்றினார் மேலும் காவேரி, குட்டி, காந்தி, செந்தில், தனபால், கேபிள்மணி, சி.பி. ரமேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் வஜ்ரவேல், கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், காவேரிப்பட்டினம் ஒன்றிய செயலாளர் விஜய் வல்லரசு, இளைஞர் அணி மாவட்ட செயலாளர் கணக்கன், ஊராட்சி கிளைக் கழக செயலாளர் சி.பாஸ்கரன், மத்திய ஒன்றிய துணை செயலாளர் சக்தி, சிவா, பிரகாஷ், ஒன்றிய பிரதிநிதிகளான பாலாஜி, விஜய், கார்த்திக், முன்ராஜ், பலராமன், சக்தி, குமார், அனுசந்திரன், உள்ளிட்ட தேமுதிகவை சேர்ந்த ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கிய பின்னர், முதியோருக்கு நலத்திட்ட உதவிகளான அரிசி பருப்பு, சர்க்கரை, வெங்காயம், பூண்டு, உள்ளிட்ட சமையல் பொருட்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியாக முருகன், நாகராஜ், ராஜசேகர், பாண்டி, கிருஷ்ணமூர்த்தி, விஜயகுமார், ஆகியோர் நன்றி உரையாற்றினார்.

# மதுரை: கவுன்சிலர்களை கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் பொறுப்பு மேயர்!

மதுரை: கட்டுப்பாடில்லாமல் பேசும் கவுன்சிலர்களைக் கட்டுப் படுத்தவோ, கண்டிக்கவோ முடியாமல் துணை மேயர் டி.நாகராஜன் தவிப்பதால் அதிகாரிகளுக்கு ஆதரவாகப் பேச ஆளும்கட்சிக்கு ஒரு கவுன்சிலர்கூட இல்லாமல் மதுரை மாநகராட்சிக் கூட்டம் சமீப காலமாக பெரும் கூச்சல் குழப்பத்துடன் நடக்கிறது.

மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளில் பெரும்பான்மை யாக திமுகவைச் சேர்ந்த 67 கவுன்சிலர்கள் உள்ளனர். அவர்களுக்கு அடுத்து அதிமுகவுக்கு 15, காங்கிரஸூக்கு 5, மார்க்சிஸ்ட்டுக்கு 3, மதிமுகவுக்கு 3, விசிக, பாஜக, சுயேச்சை தலா 1 உட்பட 4 பேர் உள்ளனர். மார்க்சிஸ்ட் கவுன்சிலர் ஒருவர் இறந்து விட்டதால் அந்த வார்டு காலி யாக உள்ளது.

கடந்த காலத்தில் திமுகவைச் சேர்ந்த இந்திராணி மேயராக இருந்தார். அப்போது திமுக கவுன்சிலர்கள் தமிழக அரசுக்கும், மாநகராட்சி நிர்வாகத்துக்கும் ஆதரவாக நிற்பார்கள். எதிர்க் கட்சி கவுன்சிலர்கள் விமர்சனம் செய்தால் மேயருக்கும், அதிகாரிகளுக்கும் ஆதரவாக பதிலடி கொடுப்பார்கள்.

ஆனால், தற்போது ஆளும்கட்சிக்கு ஒரு கவுன்சிலர்கூட இல்லாததால் திமுக, அதிமுக கவுன்சிலர்களின் வாதங்களையும், கேள்வி களையும் சமாளிக்க முடியாமல் அதிகாரிகள் திணறுகிறார்கள். மாமன்றக் கூட்டத்தை நடத்தும் பொறுப்பு மேயராக இருக்கும் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த துணை மேயர் டி.நாகராஜன், கவுன்சிலர்களை கண்டிக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாமல் தவிக்கிறார். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

தற்போது ஆளும்கட்சிக்கு ஒரு கவுன்சிலர்கூட இல்லா ததால் மாநகராட்சிக்கும், அரசுக்கும் எதிராகப் பேசும் கவுன்சிலர்களுக்கு பதிலடி கொடுக்க ஆளில்லை. ஆளும்கட்சி அமைச்சரின் செயல்பாடுகளை திமுக கவுன்சிலர்கள் விமர்சித்தால் கோஷ்டிப்பூசலால் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் தவெக எம்எல்ஏக்கள் அவற்றை கண்டும், காணாமல் உள்ளனர்.

அதுபோல், கடந்த காலத்தில் மாநகராட்சி ஆணையரை மீறி கவுன்சிலர்கள் அதிகாரிகளை கண்டிக்கவோ, நேரடியாக கிண்டலாகப் பேசவோ, கடிந்து கொள்ளவோ முடியாது. ஏனென்றால், அவர்கள் மீண்டும் தங்கள் வார்டு பணிகளுக்கு ஆணையரிடமும், மேயரிடமும் தான் போய் நிற்க வேண்டும். அதனால், மாநகராட்சிக் கூட்டத்தில் மேயரையும், ஆணையரையும் அனுசரித்தே கவுன்சிலர்கள் அனைவரும் பேசி வந்தனர். தவெக அரசு, அதன் அமைச்சர்களின் வழிகாட்டுதல் படிதான் தற்போது மாநகராட்சி அதிகாரிகள் செயல்படுகிறார்கள். பொறுப்பு மேயரான துணைமேயர், மாநகராட்சி நிர்வாகத்தில் மேயருக்கான முழு அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. அவரே, மாநகராட்சிக் கூட்டங்களில், ஒரு கவுன்சிலர் போல் அதிகாரி களிடம் வாக்குவாதம் செய்யும் சூழல்தான் உள்ளது. மேலும், மாமன்றக் கூட்டத்தில், விவாதம் தொடங்கு வதற்கு முன்பே கவுன்சிலர்கள் ஆள் ஆளாளுக்கு எழுந்து கட்டுப்பாடின்றி பேசுகின்றனர். தீர்மானங்களை வாசிப்பதற்கு முன்பே அதைப் பற்றி விவாதிக்கிறார்கள்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் இயக்கம் மறு சீரமைப்பு(SSA 2) ஆலோசனை கூட்டம்



திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சசிகுமார், தலைமையில் இயக்கம் மறு சீரமைப்பு(SSA 2) ஆலோசனை கூட்டம், மணவாள நகர், பகுதியில் உள்ளதனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் வடக்கு மாவட்ட பார்வையாளராக ஈரோடு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் சரவணன், கலந்து கொண்டு கட்சி வளர்ச்சி பணிகளை குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்,

அதில் SSA2 திட்டத்தின் முக்கிய நோக்கம்மானது வருகின்ற 2029 ல் ராகுல் காந்தியை பிரதமராக பதவில் அமர வைப்பதற்கான தேர்தல்களை எதிர்கொள்ள வியூகங்களை வகுப்பது குறித்தும், மேலும் 10 பூத்திற்கு ஒரு மண்டல தலைவர் நியமனம் செய்யப்பட்டு மாவட்ட, வட்டார, நகர, பகுதி மற்றும் ஊரக அளவில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த வேண்டும் எனவும், அதற்காக புதிய வட்டார, மண்டல, தலைவர்களை தேர்ந்தெடுத்து எதிர்கால தேர்தல்களுக்கு தயார்படுத்த வேண்டும் என ஆலோசனைவழங்கினார்.

அதனை தொடர்ந்து வட்டார, ஒன்றிய, நகர, பேரூர், மண்டலம் , மாவட்ட ஆகிய பதவிற்கு போட்டியிடுவதற்கான விருப்பம் மனு படிவங்களை கட்சி நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டன. இதில், தமிழ்நாடு காங்கிரஸ் தொடர்பு மைய தலைவர் ஏஜி சிதம்பரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாநில துணைத்தலைவர் ஏகாட்டூர் ஆனந்தன், மாநில செயலாளர் வழக்கறிஞர் சம்பத், வழக்கறிஞர் கோவிந்தராஜ், அஸ்வின் குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் பி ஆர் ரமேஷ், வெங்கட்ராஜ், ஓ பி சி பிரிவின் மாநில செயல் தலைவர் ஜே கே வெங்கடேஷ், இளைஞர் காங்கிரஸின் மாநில பொதுச் செயலாளர் A திவாகர், மாவட்ட துணைத் தலைவர் எம் கே மணவாளன், மாவட்ட சிறுபான்மைபிரிவு கலீல் ரகுமான், ஊடகப்பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் முபாரக், மாநில வழக்கறிஞர் பிரிவு துணைத் தலைவர் இமாலயா, அருண் பிரசாத், சண்முகம், மாநில மகளிர் அணி துணைத் தலைவி மாதவி ராஜா, மாவட்ட மகளிர் அணி தலைவி ஜோதி சுதாகர், உட்பட மாநில, மாவட்ட, வட்டார, நகர, தலைவர்கள், உட்பட 300க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் கடத்தூர் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோவிலில் ரூ.5.41 கோடி மேம்பாட்டு பணிகள்: கலெக்டர் ரேவதி ஆய்வு



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே திருநாகேஸ்வரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ நாகநாத சுவாமி கோவில் (ராகு ஸ்தலம்) கோவிலில் சுற்றுலாத்துறை சார்பில் ரூ.5.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு மேம்பாட்டு பணிகளை மாவட்ட கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்காக 6 காத்திருப்பு அறைகள், பாதுகாப்பு அறை, ஏவகை கழிப்பறைகள், நடைபாதை, புல்வெளி மற்றும் செடிகள், நவகிரக விண்வெளி பூங்கா, வெளிப்புற மின்விளக்கு வசதி, கோபுரங்களுக்கு சிறப்பு மின்விளக்கு அலங்காரம், வழிகாட்டி பலகைகள், இருக்கைகள், குடிநீர் மற்றும் குப்பைத்தொட்டிகள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பணிகளின் முன்னேற்றத்தை கேட்டறிந்த கலெக்டர், அனைத்து பணிகளையும் தரமாகவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து சீனிவாசநல்லூர் அங்கன்வாடி மையம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் நியாய விலைக்கடையில் ஆய்வு மேற்கொண்டார். பொதுமக்களுக்குதேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அரசு நலத்திட்டங்கள் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# சீட்டு மோசடி புகார்: ரூ.80 ஆயிரம், தங்க நகை திருட்டு குறித்து எஸ்.பி.யிடம் புகார்



வேலூர் ஆக:28 வேலூர் மாவட்டம் வேலூர் சலவன் பேட்டையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் வேலூர் எஸ்.பி. அலுவலகத் தில் சீட்டு மோசடி தொடர்பாக புகார் அளித்தார். அந்த புகார் மனுவில் நான் ஆரணி ரோட்டில் ஒருஜுவல்லரிகடைஅருகே சீட்டு அலுவலகம் நடத்தி வருகிறேன். என்னிடம் வேலூரை சேர்ந்த சரவணன் என்பவர் ரூ.2 லட்சம் ரூ.3 லட்சம் என பல தவணைகளாக சீட்டு தொகை கட்டி வந்தார். அவர் சீட்டு முடிவதற்குள்ரூ. 10 லட்சம் மதிப்புள்ள சீட்டை எடுத்துக் கொண்டார். ஆனால்எடுத்த சீட்டுக்கு அவர் ஒழுங்காக சீட்டு பணம் கட்டவில்லை. இதையடுத்து நான் சீட்டு பணம் கட்ட அவரிடம் வலியுறுத் தினேன். ஆனால் அவர் பணம் உரிய முறையில் செலுத்தவி ல்லை. இது தொடர்பாக வேலூர் தெற்கு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தேன். போலீசார் என்னிடமும் சரவணனும் விசாரணை நடத்தினார்கள். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சரவணன் எனது அலுவலகத்தை உடைத்து அதிலிருந்து ரூ. 80 ஆயிரம் 1.1/2 பவுன் தங்க நகை மற்றும் ஆவணங்களை திருடி சென்று விட்டார். இது தொடர்பாக போலீஸ் நிலையத்தில் புகார் செய்தேன். ஆனால் போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்த விவாகரத்தில் எஸ்பி உரிய நடவடிக்கை எடுத்து எனதுபணத் தை மீட்டு தர வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.